Registered as a Newspaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை–09 | 21–04–2004 | புதன்கிழமை | ஓசை –63




# அனைவரும் ஒன்றுபட்டு பெரும் சக்தியாக நிற்பதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா.உ.கள் மத்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

(கிளிநொச்சி)

**"எம்முள் இருந்த சிறு சிறு முரண்பாடுகளெல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு பெரும் சக்தியாக நிற்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்" இவ்வாறு நேற்றுத் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்றுக் காலை கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழத்தேசியத்தலைவர் அவர்களை தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 22 பேரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இக்கலந்துரையாடலில் புலிகள் தரப்பில் தேசியத்தலைவர் அவர் (8ஆம் பக்கம் பார்க்க)





## தேசியத் தலைவரைத் தனித்தனியே சந்திரசேகரன், மனோகணேசன் சந்திப்பு

### இன்றைய அரசியல் நிலவரம் குறித்துப் பேச்சு

(கிளிநொச்சி)

மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் குழுவினரும்,மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் குழுவினரும் தனித்தனியாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின்போது இன்றைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் தமிழ்த்தேசியத்தை உறுதியாக பேணுவதற்கு செய்யவேண்டிய பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## ஆயுத ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் பலமாக உள்ளோமென மக்கள் உணர்த்தியுள்ளனர்

### கூட்டமைப்பு பா.உ. செல்வம் அடைக்கலநாதன்

எமது மக்கள் ஆயுத ரீதியாகப் பலம் பொருந்திய நிலையில் இருக்கின்ற அதேவேளை, அரசியல் ரீதியாகவும் நாம் பலமாகத் தான் இருக்கின்றோம் என்பதை தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து வாக்களித்ததன் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து உரையாடிய பின்னர் பத்திரிகையாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த சிறிலங்காவின் 13ஆவது நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் தேசியத்துக்கு கிடைத்த வெற்றியின் மகிழ்வை நாம் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் தெரிவு தொடர்பாக நேற்று முடிவு எடுக்கவில்லை

### – கூட்டமைப்பு பா.உ.கள் தெரிவிப்பு

சபாநாயகர் தெரிவில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து நேற்றைய சந்திப்பின் போது முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.நேற்று தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தனர்.

பாராளுமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி கூடும் முன்பு அன்று காலை 9 மணிக்கு கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடிமுடிவு எடுப்போம். நாங்கள் எந்தக்கட்சி ஆட்சியமைத்தாலும் நாம் ஆதரவு வழங்கப்போவதில்லை நாம் எமது உரிமைகளை தனித்துநின்று பாராளுமன்றத்தில் நடவடிக்கைகள் எடுப்போம் என்றும் என கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

## பிணக்கைத் தீர்க்க தேசாபிமானிகள் முயற்சி

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தொடர்பில் எழுந்துள்ள மகாவலி அமைச்சு முறுகலைத் தீர்க்கும் முயற்சிகள்மேற் கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இது சம்பந்தமாக சனாதிபதியுடன் தேசாபிமானிகள் அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ஸ தேரர் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார் எனினும் அந்த பேச்சு வார்த்தை இன்றும் (8ஆம் பக்கம் பார்க்க)

## 22 கூட்டமைப்பு பா. உ.களும் இணைந்து கிழக்கிற்குச் செல்வர்

தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கிழக்கு மாகாணத்துக்குச் செல்லவுள்ளதாக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அங்குள்ள மக்களைச் சந்தித்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் குறித்து அவர்களுக்கு ஆறுதல் கூறும் முகமாகவே அவர்கள் செல்ல வுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

## சத்துருக்கொண்டான் கடற்கரையில் புதைக்கப்பட்ட நிலையில் சடலம்

### –பிள்ளையானால் சுடப்பட்டவருடையது

சத்துரு கொண்டான் கடற்கரையில் புதைக்கப்பட்ட நிலையில் சடலம் ஒன்று மீனவர்களால் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காம் திகதி கருவப்பங்கேணியில் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களால் கடத்தப்பட்டு காணா (8ஆம் பக்கம் பார்க்க)

## உயிருடன் அடக்கம் செய்யப்பட இருந்த சிசு இறுதிநேரத்தில் காப்பாற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தாதியர்களின் கவலையீனத்தால் உயிருடனேயே அடக்கம் செய்யப்படவிருந்த சிசு ஒன்று இறுதிநேரத்தில் உயிர்தப்பியது.நேற்றுமுன்தினம் நள்ளிரவு யாழ்.போதனா வைத்திசாலையின் பிரசவவிடுதியில் இடம் பெற்றஇச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; சம்பவ நேரத்தில், தாய் ஒருவரால் பெற்றெடுக்கப்பட்ட சிசுஒன்று அசைவுகளோ, (8ஆம் பக்கம் பார்க்க)

# பொருண்மிய மதியுரையகத்தின் சர்வதேச ஆய்வரங்கின் ஆரம்பநிகழ்வு







# செல்வபுரம்-வட்டுவாகல் பாதையூடாக பேருந்து சேவையை நடத்தக் கோரிக்கை

## - மக்கள் முல்லை. அரச அதிபருக்குக் கடிதம்

(முல்லைத்தீவு)

தற்போது செல்வபுரம்-வட்டுவாகல் வீதி போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாமல் ஆங்காங்கே குழிகள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இதனால் பல வீதி விபத்துக்கள் சம்பவிக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. எனவே இவ் வீதியை சீரமைத்துத் தருமாறு செல்வபுரம், வட்டுவாகல் மக்கள் முல்லை. அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் இப்பாதை மிகவும் விசாலமானதாகவும், குடிசனம் நிறைந்த கிராமத்தினூடாகச் செல்வதாலும், குறுகிய தூரத்தைக் கொண்டதாலும் மிகவும் முக்கியத்துவம் கொண்டதாக அமைகிறது. மேற்படி காரணங்களால் கடந்த 1982ஆம் ஆண்டிலிருந்து இவ் வழியாகவே சகல பேருந்து சேவைகளும் நடாத்தப்பட்டன. அதற்கு முற்பட்ட காலத்தில் பேருந்துசேவை கரைச்சிக்குடியிருப்பு-வட்டுவாகல் பாதையூடாக நடாத்தப்பட்டபோது அப்பாதை சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டதால் அப்பாதையில் பேருந்துக்காக காத்திருந்த மக்களிடம் பல வழிப்பறிச் சம்பவங்களும், துர்நடத்தைச் சம்பவங்களும் இடம்பெற்றன. அத்துடன் செல்வபுரம் மக்களுக்கும், வட்டுவாகல் மக்களுக்கும் பெரும் அசௌகரியமாகவும் இருந்தது. எனவே தான் பேருந்து சேவையை செல்வபுரம் ஊடாக நடாத்துவதற்கு ஏற்பாடானது.

தற்போது மீண்டும் கரைச்சிக் குடியிருப்பு-வட்டுவாகல் பாதைவழியாக பேருந்துசேவை யை நடாத்துவதற்கான திட்டமிடல் உள்ளதாக அறிகிறோம். தயவுசெய்து மேலே குறிப்பிட்ட காரணங்களைக் கருத்திற் கொண்டு செல்வபுரம்-வட்டுவாகல் பாதையூடாக பேருந்து சேவையை தொடர்ந்து நடாத்துமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (20

# சட்டவிரோத மண் அகழ்விற்குத் துணைபோகும் படையினர் குறித்து பொது அமைப்புக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வரும் சட்டவிரோத மண்அகழ்வுகளுக்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் துணைபோவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சூழல் சமநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மண்அகழ்வதற்கு சட்ட ரீதியாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும் யாழ். குடாநாட்டில் உள்ள அரச காணிகள் தனியார் காணிகள் கைவிடப்பட்ட பிரதேசங்கள் ஆகியவற்றில் இவ்வாறான சட்டவிரோதமான மண் அகழ்வுகள் தொடர்கின்றன.

இவ்வாறான சட்டவிரோத செயலை தடுத்து நிறுத்த வேண்டிய பொலிசாரும் இராணுவத்தினரும் லஞ்சத்திற்காக இச்சட்டவிரோத மண் அகழ்வுகளை அனுமதித்து வருகின்றனர்.

இவர்களின் இச்செயற்பாடுகள் குறித்து விசனமடைந்துள்ள மக்கள் அமைப்புக்கள் பலவும் யாழ். அரச அதிபரிடம் இவைதொடர்பாக முறைப்பாடுகளையும் செய்துள்ளனர். (33)

# தீவகம், வடமராட்சி, யாழ்ப்பாணம் பகுதிகளுக்கு 6 குளிரூட்டல் இயந்திரங்கள்

## உலகஉணவு ஸ்தாபனம் அன்பளிப்பு

யாழ். மாவட்ட மீனவர்களின் வருமானத்தை மேம்படுத்தவென உலக உணவு ஸ்தாபனம் 18 மில்லியன் ரூபா பெறுமதியான குளிரூட்டல் இயந்திரங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

யாழ்குடாநாட்டில் இருந்த ஐஸ்கட்டி உற்பத்தி நிறுவனங்கள் கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடக்கிவைக்கப்பட்டுள்ளன. இதனால் மீனவர்கள் தாம் பிடிக்கும் கடலுணவுப் பொருட்களை குளிரூட்டிவைப்பதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் போதிய அளவு ஐஸ்கட்டிகள் இல்லாது பெரும இன்னல்களை எதிர்கொண்டு வந்தனர்.

[illegible] மீனவ சமூகத்தினர் விடுத்து வந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து, தீவகம், வடமராட்சி,யாழ்ப்பாணம் ஆகிய மூன்று பிரதேசங்களுக்குமான கடற்தொழிலாளர்கள் சமாசங்களுக்கு ஒவ்வொன்றும் தலா 3மில்லியன் பெறுமதியுடைய 6குளிரூட்டல் இயந்திரங்களை உலகஉணவு ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

இவ்இயந்திரங்கள் ஒவ்வொரு சமாசத்திற் கும் தலா இரண்டு விகிதம் பகிர்ந்த ளிக்கப்பட்டுள்ளன. (33)

## "பாஜ்" நிறுவனம் நிவாரணம்

(அலுவலகசெய்தியாளர்)

வெளிமாவட்டங்களிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் வறுமையானவர்களுக்கும் கிராம அலுவலரால் விதந்துரை செய்யப்பட்டிருந்தவர்களுக்கும் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவியுடன் 'பாஜ்' நிறுவனத்தினூடாக உணவல்லாத பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றது. இவ்வகையில் ஏற்கனவே பட்டியலில் இப்பொருட்களைப் பெறாதவர்கள் நாளை மறுதினம் கரைச்சிப்பிரதேச செயலகத்தில் சமூகம் தந்து இப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளிகரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் விதந்துரைக்கப்பெற்ற வர்கள் தங்கள் பெயர்களை கிராம அலுவலர் அலுவலகத்தில் சென்று உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

## வரி விளம்பரம்

### ஆரம்பமாகிறது

கேம்பிறிச் கல்லூரி பேருந்து நிலைய வீதி கிளிநொச்சி ஆரம்பம் 2004/04/21 புதன் மாலை 4 மணிக்கு நிர்வாகி S.தவரூபன். (4451

### அமுதன் கல்வி நிலையம் புதுக்குடியிருப்பு

A/L வரலாறு 2005,2006ம் ஆண்டிற்கானது 23ம் திகதி மாலை 3.00 மணிக்கு ஆரம்பகாகின்றது ஆசிரியர்-ஆனந்தன். (4080)

### தொடர்பு கொள்ளவும்

பாலியாறு வெள்ளாங்குளத்தை விசிப்பிடமாக கொண்ட செல்லையா-விநாயகம் என்பவரை கடந்த 11 நாட்களாக காணவில்லை எனவே எங்கு இருந்தாலும் உடன் தொடர்பு கொள்ளுமாறு அவருடைய மனைவி கேட்டுக் கொள்கின்றார். தகவல் மனைவி மல்லிகா (4449)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 |  | 02 |
| □ | | □ |
| 11 | | 05 |
| □ | | □ |
| 1925 | | 2003 |

திதி. 21.04.2004 (புதன்கிழமை)

வைத்திய கலாநிதி

**டாக்டர் சு.சிறீராஜசேகர்**

M.B.B.S. (Cey) D.T.M& H

ஓய்வுபெற்ற பிராந்திய வைத்திய அதிகாரி

*ஈராறு மாதங்கள் சென்றாலும் உங்கள்*
*நினைவு எம்மை விட்டகலா!*
*நல் வைத்தியனாய் இறுதி உயிர்மூச்சு*
*வரை நற்பணி செய்தீரே!*

நல் அறிவுரை ஆலோசனை வழங்கினீரே இனி எங்கே அவற்றைகேட்போம்?

*இல. 11 கனகபுரம், கிளிநொச்சி.* (4452) நீங்காத துயருடன் குடும்பத்தினர்

## - க.பொ.த. (உ/த)பரீட்சையில் -

# ஆள்மாறாட்டம் செய்வோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## - பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

மே மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (உ/த) பரீட்சையின் போது ஆள்மாறாட்டம் மற்றும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் மீது பரீட்சைத்திணைக்களம் கடும் ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கவுள்ளது. அதே வேளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாகக் கடும் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வருடாந்தம் இப்பரீட்சையின் போது மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்தே இம்முறை இத்தகையதோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இத்தகைய மோசடிகளில் ஈடுபடுவோர் மீது பரீட்சைத் திணைக்கள ஒழுங்காற்று நெறிகளுக்கமைய கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் அத்துடன் இவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு குற்றவியல் சட்டங்களுக்கமைய சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் பரீட்சைத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இம்முறை பரீட்சைக்கு சுமார் இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர் என்றும் இவர்களுக்கான அனுமதி அட்டைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## விளையாட்டுப்போட்டி

மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) பிரதேச செயலக பிரிவின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் 21.04.2004 புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலய விளையாட்டுத்திடலில் பிரதேச செயலாளர் திரு.ச.அ.ஜெறோம அவர்களின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் திரு.செ.தயானந்தா அவர்களின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

தகவல்
S.O

(சி-9380)

# அமெரிக்கா-இஸ்ரேலை தோற்கடிக்க அரபு நாடுகளின் கூட்டணி அவசியம்

## -கமாஸ் அரசியல் பிரிவு தலைவர் அழைப்பு

(டமாஸ்கர்)

**அமெரிக்காவையும் இஸ்ரேலையும் தோற்கடிப்பதற்கு அரபு நாடுகள் முஸ்லீம் சமூகத்தவர்களுடன் கூட்டணி ஏற்படுத்த வேண்டுமென கமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் ஷறாலித் மேசாத் கூறியுள்ளர்.**

அண்மைக்காலத்தில் கமாஸ் இயக்கத்தை நலிவடையச் செய்வதற்காக அந்த இயக்கத்தலைவர்கள் இருவர் அடுத்தடுத்து இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்ட பின்னர் ஷறாலித் மேசார் இந்த அழைப்பை விடுத்துள்ளர்.

இவர் இறுதியாகக் கொல்லப்பட்ட கமாஸின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரான அப்துல் அஸீஸ் சன்சீசிக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தனது இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தக்கூட்டம் சிரியாவின் தலைநகரில் நடைபெற்றது.

கமாஸ் இயக்கத்தில் அரசியல் பிரிவுத்தலைவரான ஹாலில் சேமலித்தும் தற்போது சிரியாவிலிலேயே தங்கி உள்ளதாகவும் செய்திகள் தெரி விக்கின்றன.

இதேவேளை கமாஸ் இயக்கத்தலைவர்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை அமெரிக்காவின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஆதரித்து அதனை நியாயப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்தோனேசியாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் மதத்தலைவர் அபூ பக்கர்பசீர் தனது சட்டவாளர்களுடன் கலந்துரையாடுகிறார்.

### - ஈராக்கில் நிலைகொண்டுள்ள -

# படையினரை திருப்பியழைக்க சில நாடுகள் தீவிர ஆலோசனை

(பாக்தாத்)

ஈராக்கில் இருந்து தமது இராணுவத்தினரை திருப்பி அழைப்பது என்று ஸ்பெயின் அரசு எடுத்த தீர்மானம் ஈராக்கில் தமது படைகளை வைத்திருக்கும் மேலும் பல நாடுகளைச் சிந்திக்க வைத்துள்ளது.

ஈராக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைக்கு தமது துருப்புக்களை அனுப்பியுள்ள அரசுகள் அப படைகளை உடனடியாகத் திருப்பி அழைப்பது பற்றி யோசித்து வருகின்றன.

மத்திய அமெரிக்க நாடான கொண்டுராசும் இத்தகைய நாடுகளில் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கிய நிலைமைபற்றி உடனடியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அந்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக அதன் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். கண்ணிவெடிகளை அகற்றுவதற்கும் மருத்துவ உதவிகளை அளிப்பதற்கும் அனுப்பப்பட்டுள்ள கொண்டுராஸ் படைகள் யூலை மாதம் நாடு திரும்பியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



ஈராக்கில் பணியாற்றும் கொண்டுராஸ் படையினர்.

# ஒன்றரை மாதத்தில் படைமுற்றாக விலகும்

## -ஸ்பெயின் நடவடிக்கை

(மட்ரிட்)

ஈராக்கில் நிலை கொண்டுள்ள தமது படைகளை இன்னும் ஒன்றரை மாதத்தினுள் திருப்பியழைக்க முடிவு செய்துள்ளதாக ஸ்பெயின் அறிவித்துள்ளது.

ஈராக்கிலிருந்து தமது படைகளை வெளியேற்றும் நடவடிக்கை நேற்று முன்தினம் தொடங்கியுள்ளதாக கூறியுள்ள ஸ்பெயின் அரசு இன்னும் ஒன்றரை மாதத்தினுள் முழுப்படையினரும் திருப்பி அழைக்கப்படுவார்கள் என்று கூறியுள்ளது.

நேற்றுமுன்தினம் இராணுவ விமானம் ஒன்று படையினரைத் திருப்பியழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது என்று ஸ்பெயினின் பாதுகாப்பு அமைச்சர் ஜோஸ் போனோஸ் கூறியுள்ளார்.

### வேண்டுகோள்

(சிட்னி)

அவுஸ்திரேலிய இராணுவ வீரர்கள் 850 பேர் ஈராக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளனர் அவர்கள் இந்த நாட்டிலிருந்து வெளியேறக் கூடாது என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியான தொழிற்கட்சி நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றி பெற்றால் கிறிஸ்மஸ் பண்டிகையின் போது இராணுவத்தை வாபஸ் பெறுவோம் என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் பார்வை மாறினால் அணுத் திட்டங்களை கைவிடலாம்

## வடகொரியா அறிவிப்பு

(பியாங்யாங்)

அமெரிக்கா பகைமை நோக்குடன் தம்மைப் பார்க்கும் பார்வையை மாற்றினரல் அணுவாயுதத் திட்டங்களை கைவிடத்தயார் என வடகொரியத் தலைவர் ஷிங்ஜொங்கின் கூறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடகொரியத் தலைவர் சீனாவிற்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு அந்த நாட்டுத்தலைவர்களை சந்தித்த அவர் இவ்வாறு கூறி இருப்பதாக் தென்கொரியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீன சனாதிபதியைச் சந்தித்த தென்கொரியத் தலைவர் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் காரணங்களை விளக்கிக் கூறியுள்ளார் இந்தத் திட்டங்களால் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளை தீர்ப்பதற்காக ஆறுதரப்புப் பேச்சுவர்ர்தைகள் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கு திட சங்கற்பத்தையும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

# "கிரவிற்றி ப்ரோப் பீ" செய்மதியின் விண் பயணம் ஒத்திவைப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இருந்து நேற்றுக்காலை விண்ணிற்கு ஏவப்படவிருந்த கிரவிற்றிப் ரோப்பீ என்ற செய்மதியுடன் கூடிய விண்கலத்தின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உலகின் ஒப்பற்ற விஞ்ஞானியான அல்போட் ஜஸ்ரின் சார்புமை கொள்கையைச் சோதிப்பதற்கான இந்த உபகரணமானது அமெரிக்காவின் நாசா நிறுவனத்தினால் சுமார் 45வருட உழைப்பின் பின்னர் வடிவமைக்கப்பட்டது.

கிரவிற்றிப் ரோப்பீ என்ற இந்த செய்மதி நாசா இதுவரை உருவாக்கிய உபகரணங்களுள் மிகவும் திருத்தமான உபகரணமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜஸ்ரினின் சார்பினை சார்புமைத் தத்துவத்தை பரிசோதிக்கும் இந்த இயந்திரத்திற்கு செயல்வடிவம் கொடுப்பது மிகவும் கடினமான விடயமாக மாறியிருப்பதற்கான காரணம் அதற்கான செலவு பெருமளவு கூடியிருப்பதே எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



நாசாவினால் விண்ணுக்கு அனுப்பப்படவுள்ள கிரவிற்றிப்ரோப் பீயைப் பரிசோதனை செய்யும் பொறியியலாளர்.

# ஷியா பிரிவினர் ஆயுதங்களை ஒப்படைத்தால் அவர்கள் மீதான தாக்குதலை நிறுத்துவோம்

## அமெரிக்கப்படைத்தரப்பு அறிவிப்பு

(பாக்தாத்)

பலூஜா நகரில் தாக்குதலில் ஈடுபட்டுவரும் சன்னி முஸ்லீம் தீவிரவாதிகள் தமது ஆயுதங்களை ஒப்படைப்பார்களேயானால் அவர்களுக்கு எதிரான தாக்குதல்களை மீண்டும் ஆரம்பிக்கமாட்டோம் என ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பலூஜா நகரில் நிரந்தர யுத்த நிறுத்தம் பற்றி மூன்று நாட்கள் நடந்த பேச்சு வார்த்தைகளின் முடிவில் இவ்வாறு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலூஜா நகரில் கடந்த பத்துநாட்கள் யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தாலும் ஆங்காங்கே சண்டை நடைபெறுகின்றது.

இதேவேளை பலூஜா நகரில் அமெரிக்கக் கூட்டுப்படையினருக்கு எதிராக கடுமையான தாக்குதலை நடத்திவரும் சுமார் ஆயிரம் தொடக்கம் இரண்டாயிரம் வரையிலான தீவிரவாதிகள் மத்தியில் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள் எத்தகைய செல்வாக்கு செலுத்தும் என்பது தெரியாத நிலையிலேயே உள்ளது.



இந்தியா பாரமுல்லாவில் தேர்தல் பணிகளுக்குச் செல்லும் அதிகாரிகளைக் கடந்து செல்லும் பாதுகாப்புப் படையினர்.

# வன்முறைச் சம்பவங்கள் மத்தியில் இந்தியாவில் முதல் கட்ட வாக்குப்பதிவு

(புதுடில்லி)

இந்திய மக்களவைக்கான தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவுகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின இதன்படி மதியம் வரை 20 சதவீதமான வாக்குப்பதிவு நடந்துள்ளது.

நேற்றைய மக்களவைத் தேர்தல் ஆந்திரா, கர்நாடகா ,மகாராஸ்டிரா, குஜராத் உள்ளிட்ட 13 மாநிலங்களிலும் முதல் கட்டம் நேற்று மாலையுடன் முடிவடைந்துள்ளது.

அத்துடன் 3 யூனியன் பிரதேசங்களிலுள்ள 140 தொகுதிகளிலும் ஆந்திரா,ஒரிஷா மாநிலங்களைச் சேர்ந்த 344 சட்டசபைத் தொகுதிகளிலும் நேற்று காலை வாக்குப்பதிவு ஆரம்பமாகி, மாலை முடிவடைந்தது.

இதேவேளை பீகார், ஜார்க்கண்ட் ஆசாம் மாநிலங்களின் சகல தொகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன.

இருந்த போதும் மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றது. குஜாரத்தில் காந்திநகர் தொகுதியில் துணைப்பிரதமர் அத்வானி போட்டியிடுகின்றார் அத்வானி,அவருடைய மனைவி மகள்,ஆகியோர் ஹான்பூர்தொகுதியில் வாக்களித்துள்ளனர்.வாக்களிப்பின் பின்னர் பேட்டியளித்த அத்வானி மீண்டும் மத்தியில் தேசிய ஜனநாயக் கூட்டணியே ஆட்சியமைக்கும் என்று கூறியுள்ளார்

இதேநேரம் காஷ்மீரின் வடகிழக்கு மாநிலம் தவிர மற்றைய மாநிலங்களில் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.

இதேவேளை காஷ்மீர் பீகார் மாநிலங்களில் தீவிரவாதிகள் வாக்களிப்பினைக் குழப்பும் வகையில் தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள். இதில் 11 பேர்பலியாகியுள்ளனர் பலர்படு காயமடைந்துள்ளார்கள்.

# கடந்த வாரத்தில்.... 12.04.2004-18.04.2004

**12**

→ மட்டக்களப்பு-அம்பாறை பகுதிகளைக் கருணா குழுவிடமிருந்து மீட்பதற்காக விடுதலைப் புலிகளின் படையணிகள் மேற்கொண்டு வந்த நடவடிக்கையைத் தொடர்ந்து கருணா தனது நெருங்கிய சகாக்களுடன் தப்பி ஓட்டம்.

→ வட இந்திய நகரமான லக்னோவில் பா.ஜ.கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதி தனது பிறந்த தினத்தை முன்னிட்டு இலவச சேலை வழங்கிக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட நெரிசலில் 19 பெண்களும் இரு சிறுவர்களுமாக [illegible] 21 பேர் பலி.



*நெரிசலில் சிக்கிப் பலி*

→மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்கும் இடையே இங்கிலாந்தின் அண்டிகுவா மைதானத்தில் இடம்பெற்று வரும் நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளன்று டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒருவர் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்டமாக 400 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று மேற்கிந்தியத்தீவுகள் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் பிறைன் லாரா புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார். லாராவிற்கு மைதானத்தில் அதி உயர் கௌரவிப்பு இடம்பெற்றது.



*சாதனை வீரன்*

→ சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்தபோது கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோரி அவர்களது உறவினர்கள் சிறைச்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**13**

→மட்டு.அம்பாறை தளபதி ராம், மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராசா,சமாதான செயலக பிரதி இயக்குநர் பவானந்தன் ஆகியோர் முன்னிலையில் மட்டு.அம்பாறைப் பிரதேசத்தில் மீட்பு அணியுடன் இணைந்து கொண்ட 269 போராளிகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

→மலேசியச் சரக்குக் கப்பல் ஒன்று சரக்குகளை ஏற்றிக்கொண்டு மேற்கு வங்காள மாநிலம் ஹால்டியா துறைமுகத்திற்கு வந்துகொண்டிருந்தபோது 180 கடல் மைல் தூரத்தில் நீரில் மூழ்கியது.

**14**

→ இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தங்களது வழமையான ரோந்து கண்காணிப்புப் பணிகளை கிழக்கில் ஆரம்பித்தனர்.

→தென்னாபிரிக்க பொதுத் தேர்தலில் 2 கோடி வாக்காளர்கள் 17,000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களித்தனர். இதில்தென்னாபிரிக்காவின் முன்னாள் சனாதிபதி நெல்சன் மண்டேலா,தற்போதைய சனாதிபதி தபோ அம்லக்கி ஆகியோர் வாக்களித்தனர்.

→அமெரிக்கா சென்ற இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல்ஷரோன்,அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு.புஷ்சைச் சந்தித்த பின்னர் இருவரும் இணைந்து பத்திரிகையாளர் மாநாட்டினை நடத்தினர்.

→ ஆப்கானின் தென்கிழக்கேஉள்ள காந்தஹார் மாகாணத்தின் சினர்டோ மாவட்டத்தில் தலிபான்கள் நடத்திய திடீர்த்தாக்குதலில் மாவட்ட பொலிஸ் அதிகாரியும்,அவரது பாதுகாவலர்கள் ஒன்பது பேரும் கொல்லப்பட்டனர்.

→ மட்டக்களப்பில் துரோகி கருணாவால் துரோகத்தனமாகக் கொலைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத்துறை துணைப்பொறுப்பாளர் லெப்.கேணல் நீலன் அவர்களின் வித்துடல் தளபதிகள்,பொறுப்பாளர்கள், போராளிகள்,பொதுமக்கள் என பெருமளவானவர்களின் வீரவணக்கத்துடன் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில்விதைக்கப்பட்டது.




நீலனின் வித்துடலுக்கு வீரவணக்கம்

→ சீனாவின் தென்மேற்குப் பகுதியில் குளோரின் வாயுக்கசிவினால் குளோரின் வாயு சேமித்து வைக்கப்பட்ட 3தாங்கிகள் வெடித்துச் சிதறியதனால் 9 பேர் கொல்லப்பட்டனர். ஐம்பதினாயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

**15**

→இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறூவ் ஹெளவ்டே தலைமையில் மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலக மண்டபத்தில் மட்டு- அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், மட்டு அம்பாறை தளபதி ராம், மட்டு அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், சமாதான செயலக பிரதிச் செயலாளர் பவானந்தன், தளபதிகளான நாகேஷ், ரமணன்,ஜெயார்த்தனன் ,மின்னேரியாவில் உள்ள 23ஆவது படைப்பிரிவு பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தன, மட்டக்களப்பு 233ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க ஆகியோர் சந்தித்து மட்டு மாவட்டத்தில் புலிகள்- இராணுவத்தினர் புரிந்துணர்வு அடிப்படையில் செயலாற்றுவது என்றும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இருதரப்பும் மதித்து செயற்படுவது என்றும் முடிவு செய்தனர்.



*சந்திப்பின் பின்னர்*

→யாழ்- கோட்டைப் பொலிஸ் நிலையம் மீது இனந்தெரியாதோர் குழு கல்வீச்சு நடத்தியதில் விழிப்படைந்த பொலிசார் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

→ பங்களாதேஷின் வடபகுதியில் உள்ள இரு மாவட்டங்களின் 12 கிராமங்களில் வீசிய சூறாவளியினால் சுமார் 60 பேர்கொல்லப்பட்டனர். ஆயிரம் பேர்வரை காயமடைந்தனர். பெருமளவு கால்நடைகள், பயிர்கள் அழிந்தன.

→ ஈராக்கில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஜப்பானியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

→ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையில் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல,கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல்தயாசந்தகிரி, விமானப்படைத் தளபதி ஏயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோர் வாழைச்சேனை, மின்னேரியா படைத்தலைமையகங்களுக்கு விஜயம் செய்து மட்டக்களப்பு மாவட்ட ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

→கட்சியின் மத்தியகுழு எடுத்த தீர்மானங்களுக்கு எதிராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதனால் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோன் இராஜினாமாச் செய்தார்.

**16**

→மட்டு மாவட்டத்தில் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ்ஹெளவ்டே தமிழீழ விடுதலைப் புலிக ளின் பிரதிநிதிகள் விசேட அதிரடிப்படைப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.


→யாழ். நகரில் வின்சர் திரையரங்கு அமைந்துள்ள வளவினில் உள்ள கிணற்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் இரு சடலங்கள் மீட்கப்பட்டன.



*மீட்கப்பட்ட சடலங்கள்*

→ துரோகி கருணாவின் பிடியில் இருந்து மட்டு அம்பாறை மாவட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளால் இரத்தம் சிந்தாது மீட்கப்பட்டதையடுத்து தேசியத்தலைவரின் பணிப்பின் பேரில் மூத்த தளபதிகளான கேணல் பானு, கேணல்சொர்ணம் ஆகியோர் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தனர்.

→ இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையேயான உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கத்திற்காக இந்திய யுத்தக் கப்பல்“தாரங்கிரி” 4 நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.



*தாரங்கிரியின் கொழும்பு விஜயம்*

→மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் மட்டக்களப்பில் வர்த்தக நிலையங்கள் வைத்திருந்த யாழ். மாவட்ட வர்த்தகர்களைச் சந்தித்து கருணாவின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் பற்றிக் கலந்துரையாடினார்.


→இந்திய பாராளுமன்றத் தேர்தலில் 16 மாநிலங்களைச் சேர்ந்த 181 மக்களவைத் தொகுதிகளிற்கான வேட்புமனுத்தாக்கல் ஆரம்பம்.

→இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது பாராளுமன்றக் குழுக்கூட்டம் பாராளுமன்றக்குழு அறையில் குழுத்தலைவர் சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற போது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

→ இராணுவ மின்பொறியியல் படைப்பிரிவினரால் உற்பத்தி செய்யப்பட்ட 5 பவல் கவச வாகனங்களை இராணுவத் தளபதி லெப் ஜெனரல் பலகல்ல, விசேட அதிரடிப்படைக் கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லொகேயிடம் கையளித்தனர்.

**17**

→ஹமாஸ் இயக்கத்தின் உயர் தலைவரான அப்துல் அஸீஸ் அல்ரன் டிசி பயணம் செய்த கார் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்டர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார்.



*கொலை செய்யப்பட்ட ஹமாஸ்தலைவர்*

→பிரபல தென்னிந்திய சினிமா நடிகை சௌந்தர்யா உள்ளிட்ட நால்வர் பெங்களூரில் விமான விபத்தில் பலி.

→விடுதலைப் புலிகளின் சம்பூர் அரசியல் துறை அலுவலகத்தில் திருமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், புலிகளின் சமாதானச் செயலகப் பிரதிப்பணிப்பாளர் பவானந்தன், விடுதலைப்புலிகளின் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராசா, யுனிசெவ்பின் திருமலை மாவட்ட பிரதிநிதி கபிரியெலா,சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருமலை மாவட்ட பிரதி நிதி பற்றிக் கோல்டன் ஆகியோர் முன்னிலையில் 31 சிறுவர்கள் யுனிசெவ் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

→இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ்ஹெளவ்டே ஸ்ரீலங்கா இராணுவத்தின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், ஸ்ரீலங்கா கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதி ஆகியோரைச் சந்தித்து திருமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

→ ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் உள்ள அரச மாளிகையில் புதிய ஸ்பெயின் பிரதமராக ஜோசி லூயிஸ் ரெட்றிக்கஸ் சபாரிரோபே பதவி யேற்றார்.

→ இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற பிரிவினை வாதிகளின் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

→ மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கிங்சிலி இராசநாயகம் தமது பதவியை இராஜினாமா செய்தார்.

→அலரி மாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த கடற்படைத்தளபதி தயாசந்தகிரி நாட்டின் பாதுகாப்பு, கடற்படையைநவீன வசதிகள் கொண்ட படையாக மாற்றியமைத்தல், அதில் காணப்படும் குறைபாடுகளுக்குத் தீர்வுகாணுதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்ததுடன், நினைவுச் சின்னமும் பரிசளித்தார்.

**18**

→சிரியாவின் எல்லையில் உள்ள ஈராக் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் நான்கு அமெரிக்கப் படையினர் பலி.

# ஸ்திரமான அரசும் இனப்பிரச்சினைத் தீர்வும்

விடுதலைப் புலிகளுடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஸ்திரத்தன்மையும், உறுதியான கொள்கையும் கொண்டதுமான சிறிலங்கா அரசாங்கமும், ஆட்சியாளர்களும் தேவை. இது இடைக்கால தன்னாட்சி அதிகார சபையில் ஒன்றை உருவாக்குவதில் இருந்து நிரந்தர தீர்வு எட்டப்படும் வரையில் அவசியமானதாகும்.

விடுதலைப் புலிகளைப்பொறுத்த- அதாவது தமிழர் தரப்பு உறுதியானதும் ,தெளிவானதுமான நிலைப்பாட்டுடன் உள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை தமது ஏக



பிரதிநிதிகளாகவும் ,வே.பிரபாகரன் அவர்களைத் தமது தேசியத் தலைமையாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகையினால், இனப்பிரச்சினைக்கான இடைக்காலத் தீர்வோ அன்றி நிரந்தரத் தீர்வோ தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமையின் கீழான விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் அடிப்படையில் எட்டத்தக்கவையாகும்.

ஆகையினால், இன்று இனப்பிரசசினைக்கான தீர்வு என்பது சிறிலங்கா தரப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் பாற்பட்டதாகவே இருக்க முடியும். ஆனால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழர் தரப்பில் காட்டப்படும் ஒருமித்த நிலைப்பாடும் காட்டப்படும் உறுதியும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மத்தியில் காணப்படுவதாக இல்லை. வேறுவிதமாகக் கூறுவதானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தக்க வகையில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய ஸ்திரமான அரசாங்கமோ அன்றி உறுதியான கொள்கைகொண்ட ஆட்சியாளர்களோ அன்றி அரசியல்வாதிகளோ அங்கு இல்லை.

சிறிலங்கா அரசைப்பொறுத்து மாறி மாறி ஆட்சிக்கு வந்துள்ள இரண்டு பிரதான கட்சிகளும் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது அரசியல் நிலைக்கேற்ப காலத்திற்குக் காலம் முரண்பாடான நிலைப்பாட்டையே கைக்கொண்டிருந்தனர்.

எடுத்துக்காட்டாக 2002இல் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொ.ஐமுன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அதிகாரப் பரவலாக்கல் நகல் திட்டம் ஒன்றை முன்வைத்தது. ஆனால் அதனை அன்றைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாக எதிர்த்தது . இவ்வேளையில் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி செய்த பிரேரணையை சனாதிபதி சந்திரிகா இம்முறை தனது தேர்தல் பிரச்சாரத்திற்கும் பயன்படுத்திக்கொண்டார்.

இதேவேளை 2001 இன் இறுதியில் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தம் ஒன்றைச் செய்தது மட்டுமல்ல சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்தது. இப்பேச்சுவார்த்தையானது இடையில்தடைப்பட்டதை அடுத்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க தயாரான வேளையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சனாதிபதியினால் கலைக்கப்பட்டது.

அதாவது சிறிலங்காவின்இன்றைய அரசியல் யாப்பானது ஸ்திரமான அரசாங்கம் ஒன்றிற்கு இடையூறாக உள்ளது என்பது ஒருபுறமிருக்கையில் அரசியல்வாதிகளிடம் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உளப்பூர்வமானதும், உறுதியானதும், நிறைவானதுமான கொள்கையில்லாததும்- காலத்திற்குக் காலம் எதிர்மறையான செயற்பாட்டை அவர்கள் வெளிக்காட்ட முற்படுவதும் இனப்பிரச்சினை விடயத்தில் முன்னேற்றம் என்பது காணப்பட முடியாததொன்றாக்கியுள்ளது.

ஆகையினால் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்பது சிறிலங்காவில் ஸ்திரமான அரசாங்கமும், உறுதியான அரசியல் நிலைப்பாடும் கொண்ட ஆட்சியாளர்கள் பதவிக்கு வரும் நிலையிலுமே அது சாத்தியப்பாடானதொன்றாகவே இருக்கும். ஆனால் சிறிலங்காவின் இன்றைய அரசியற் சூழ்நிலையில் அது சாத்தியமாகக் கூடியதொன்றா என்பதே இன்றுள்ள முக்கிய வினாவாகும்.

இலங்கையில் இன்றைய அரசியல் யாப்பானது சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவத்திற்கு உதவும் ஒன்றாக இருப்பது என்பது உண்மையே எனினும் ஸ்திரமானதொரு அரசிற்கு அது சற்றுப் பாதகமானதொரு நிலையைக்கொண்டதாகவே உள்ளது. அதாவது இதுவரையில் இவ்விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையூடாக தனியொரு கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாததொரு நிலையே உருவாகியிருந்தது.

"சிறிலங்காவின் இன்றைய அரசியல் நிலவரமும் சிங்கள மக்களின் மனப் போக்கில் ஏற்பட்டுவரும் மாற்றமும் சிறிலங்காவில் தற்பொழுது மட்டுமல்ல எதிர்காலத்திலும் ஸ்திரமான அரசு ஒன்று உருவாக வாய்ப்பு ஏற்படுமா என்ற கேள்வியை எழுப்புகிறது".

இந்நிலையில் விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் என்பது ஸ்திரமான ஆட்சி என்பதற்கு முட்டுக்கட்டை போன்றதாகியுள்ளது. அதாவது தொகுதிவளிப் பிரதிநிதித்துவத்தில் 2/3 பெரும்பான்மையும் (1970தேர்தலில் சு.கட்சி) 5/6 பெரும்பான்மையும் (1977 ஐ.தே.கட்சி) பெற்றது போன்றதொரு சூழ்நிலை சாத்தியமானதாக இல்லை.

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றைப் பொறுத்து ஸ்திரமான அரசுகள் ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்குக் காரணமாக இருந்தது என்பது வரலாற்றுப்படிப்பினையே. ஆயினும் அத்தகைய ஸ்திரமானதொரு அரசாங்கத்தினாலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை அமுல்செய்ய முடியும். சிறுபான்மை அரசு ஒன்றினால் அன்றி கூட்டணி அரசாங்கம் ஒன்றினால் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்கவும், அமுலாக்கவும் முடியுமா என்பது சந்தேகமே.

மேலும் அரசாங்கமும்-சனாதிபதியும் வெவ்வேறு தரப்பினராக கட்சியாளராக இருப்பினும் ஸ்திரமான ஆட்சி என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும். கடந்த ஐ.தே. முன்னணி அரசாங்கம் அறுதிப்பெரும்பான்மையைக் கொண்டதாக இருப்பினும் சனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு அரசாங்கத்தைக் கலைத்திருந்தார்.

இந்த ரீதியில் சிறிலங்கா அரசியல் யாப்பானது உறுதியான அரசாங்கத்திற்கு இடையூறானதொன்றாகவே அமையக்கூடியதாகவுள்ளது. ஆனால் அரசாங்கமும், சனாதிபதியும் ஒரு தரப்பாக இருக்கும் பட்சத்தில் அரசாங்கம் மிகவும் உறுதிமிக்கதொன்றானதாக இருக்க வாய்ப்புண்டு. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் உறுதிமிக்கதாக இருந்த காலத்தில் ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதை இரண்டாம் தரப்பிரச்சினையாக்கி இராணுவத்தீர்விற்கும் ஒடுக்கு முறைக்குமே வழி ஏற்படுத்தினர்.

எடுத்துக்காட்டாக சிறிலங்காவில் முதல் சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தற்போதைய சனாதிபதி சந்திரிகாவும்இதற்கு எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டத்தக்கவர்களாகவும் இவ்விரு ஆட்சித் தலைவர்களும் தமது அரசாங்கம் ஸ்திரமானதாக இருந்தபோது ஒடுக்கு முறையில் காட்டிய ஆர்வத்தையும், அக்கறையையும் அரசியற்தீர்வு விடயத்தில் காட்டவில்லை என்பதுமே கடந்த கால அனுபவமாகும்.

"ஒன்று மாறி ஒன்றாக இரு பிரதான கட்சிகளுக்கும் மாறி மாறி வாக்களித்து வந்த சிங்கள மக்கள் தற்பொழுது மூன்றாவதோ அன்றி அதற்கும் மேற்பட்டதாக மற்றொரு தரப்பையோ தேர்ந்தெடுப்பதில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளதையே அண்மைய தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன".

ஆனால் சிறிலங்காவில் இனிவரும் காலங்களில்-அதிலும் குறிப்பாக விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தொடரும் பட்சத்தில் அதனை மாற்றியமைத்தல் என்பது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை. ஸ்திரமானதொரு ஆட்சி என்பது சாத்தியமானதா என்பது கேள்விக்குரியதொன்றாகவே இருக்கும்.

ஏனெனில் சிறிலங்காவின் அண்மைய அரசியற்போக்கானது கடந்தகாலத்தில் இருந்து படிப்படியான மாற்றத்தைக் கொண்டதாகச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. சுருக்கமாகக் கூறுவதானால் வாக்களிப்புத் தொடர்பான விடயத்தில் பெரும்பான்மை மக்களின் மனோநிலையில் மாற்றங்களைத் தொடக்கியுள்ளதெனலாம்.



ஒன்று மாறி ஒன்றாக இரு பிரதான கட்சிகளுக்கும் மாறி மாறி வாக்களித்து வந்த சிங்கள மக்கள் தற்பொழுது மூன்றாவதோ அன்றி அதற்கு மேற்பட்ட மற்றொரு தரப்பையோ தேர்ந்தெடுப்பதில் ஆர்வம்காட்டத்தொடங்கியுள்ளதையே அண்மைய தேர்தல்களின் முடிவுகள் வெளிப்படுத்தும் உண்மைகளாகவுள்ளன.

எடுத்துக்காட்டாக 1994இல் நடந்த தேர்தலில் ஒரு ஆசனத்தை மட்டுமே பெற்ற ஜே.வி.பி. 2000த்தில் 10ஆசனங்களையும், 2001இல் 16ஆசனங்களையும், 2004 தேர்தலில் 39ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது. அதுமட்டுமல்ல இறுதித்தேர்தலில் ஜே.வி.பியில் 39பேர் போட்டியிட்டு 36பேர் அதில் வெற்றியீட்டியுள்ளனர்.

இதேவேளை கடந்த தேர்தலில் மட்டுமே போட்டியிட்ட ஜாதிக ஹெலஉறுமயே யானது ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடத்தக்கவிடயம் என்னவெனில் ஜாதிக ஹெல உறுமய என்னும் இக்கட்சி இத்தேர்தலுக்கு இரு மாதங்களுக்கு முன்பதாகவே உருவாக்கப்பட்டதொன்றாகும்.

ஜே.வி.பியினதும், ஜாதிக ஹெல உறுமயவினதும் பெரும் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் பெரிதும் வாய்ப்பானதாக இருந்ததெனினும் ஜே.வி.பி. வேட்பாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையான விருப்புவாக்குகளில் இருந்து அக்கட்சி நோக்கி மக்கள் கவனம் திரும்பியுள்ளது எ[illegible]கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை ஹெலஉறுமய ஒரு தொகுதியில் தானும் வெற்றிபெறாது விட்டாலும் அக்கட்சியானது சுமார் 5 1/2 இலட்சம் வாக்குகளைப்பெற்றுக்கொண்டுள்ளது. அது செல்லுபடியான வாக்குகளில் சுமார் ஆறு சதவீதம் (5.97% ஆகும். இந்த வகையில் பார்க்கையில் 47பாராளுமன்ற ஆசனங்களுக்கான வாக்காளர் மாற்றத்தை நோக்கமாகக்கொண்டு- பிரதான கட்சிகளைத் தெரிவுசெய்ய விருப்பின்றி வாக்களித்துள்ளனர் எனலாம்.

இந்நிலையில் ஸ்திரமான அர சாங்கம் ஒன்று எதிர்காலத்தில் எவ் வாறு சாத்தியமாகும் என்பதே கேள்வி யாகும். அதாவது இரண்டு பிரதான கட்சிகளும் அறுதிப்பெரும்பான்மை என்பதைப் பெற்றுக்கொள்ளாத நிலையிலும்-கொள்கை வேறுபாட்டைக் கொண்ட கட்சிகள் தென்னிலங்கையில் அரசியல் வளர்ச்சி கண்டுவரும் நிலையிலும் ஸ்திரமான ஆட்சி என்பது எவ்வாறு சாத்தியப்பாடானதாகும்?

அதிலும் ஜே.வி.பி. ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு என்ற நிலைப்பாட்டிற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தாதவையாகவே இருக்கையில் எவ்வாறு ஓர் ஸ்திரமான அரசாங்கமும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற உறுதியான நிலைப்பாடும் கொண்ட அரசியற் தலைமை ஒன்று சிறிலங்காவில் உருவாக முடியும்?

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியற்தீர்வு என்பது குறித்துப் பலமான கேள்வி எழுவது தவிர்க்க முடியாததொன்றே. சிறிலங்காவின் இன்றைய அரசியல் நிலவரமும் சிங்கள மக்களின் மனப் போக்கில் ஏற்பட்டுவரும் மாற்றமும், சிறிலங்காவில் தற்பொழுது மட்டுமல்ல எதிர்காலத்திலும் ஸ்திரமான அரசு ஒன்று உருவாக வாய்ப்பு ஏற்படுமா? என்ற கேள்வியையே எழுப்புகிறது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பது எவ்வாறு சாத்தியமாகும்? சிறிலங்காவைப் பொறுத்து ஆட்சியாளர்கள் இதுவரை கொடுத்துவந்த ஏமாற்றமானது மக்கள் இவர்கள் மீது அவநம்பிக்கை கொள்ளவேண்டிய சூழ்நிலையைக்கொடுத்துள்ளது. இவர் மீது அவநம்பிக்கை கொண்டுள்ள மக்கள் புதிய சக்திகள் மீது கவனத்தைத் திருப்பியுள்ளன. ஆனால் இவர்கள் புதியவர்கள். ஆயினும் இவர்களின் கொள்கையானது சிறிலங்காவின் ஒரு ஸ்திரமான அரசுக்கும், இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்விற்கும் உகந்ததாக இருப்பதாகத் தெரியவில்லை.

-ஜெயராஜ்

# தனக்கு அநீதி இழைக்கப்படுவதாக பிரதி அமைச்சர் சனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

**ஐ.ம.சு முன்னணி அரசின் அமைச்சரவை நியமனத்தின் போது தமக்கு பெரும் அநீதியிழைக்கப்பட்டதாக மாத்தறை மாவட்ட எம்.பி.யும் சுகாதார சேவைகள் பிரதியமைச்சருமான மகிந்தயாப்பா அபேவர்தன சனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

1993 ஆம் ஆண்டு முதல் பொ.ஐ. முன்னணி கட்சியின் வளர்ச்சிக்கா கவும் வெற்றிக்காகவும் கடுமையாக உழைத்ததாகவும் 2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்குப் பின்னர் இருந்து தமக்கு பதவி வழங்குவதில் அநீதியி ழைக்கப்பட்டு வருவதாகவும் தெரி வித்துள்ளார்.

முதலமைச்சர் பதவிகளிலிருந் தவர்கள் பலருக்குப் பொதுத்தேர்தலின் பின்னர் அமைச்சுப்பதவி வழங்கியிருப் பதைக் குறிப்பிட்டுள்ள அவர் தானும் முதலமைச்சர் பதவியிலிருந்து வந்தவர் என்றாலும் தமக்கென ஒரு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளமை பற்றி அக்கடிதத் தில் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.மாவட்ட முன்பள்ளிகளில் அடிப்படை வசதிகள் இல்லை

## - முன்பள்ளி க.மே.பேரவை கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகள் அதிகமானவை அடிப்படை வசதிகள் அற்றே இயங்கி வருவதாக முன்பள்ளி கல்வி மேம்பாட டுப் பேரவை கவலை தெரிவிக்கிறது.

அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் 800 ற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளில் சுமார் 600 வரையிலான முன்பள்ளி கள் அடிப்படை வசதிகள் அற்றே இயங்கி வருவதாகவும் இவற்றில் கற்றலுக் குரிய உபகரண வசதிகள் இல்லாமை அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமை தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் நியமிக் கப்படாமை தளபாட வசதிகள் இல்லாமை என்பன பெரும் குறையாகவே இருந்து வருகிறதுஎன பேரவை தெரிவித்துள்ளது.

# அன்னை பூபதி நினைவாக மரக்கன்றுகள் நாட்டல்

(அலுவலகசெய்தியாளர்)

தியாகி அன்னைபூபதியின் 16 ஆவது ஆண்டு நினை வாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய சூழல் பாதுகாப்பு பகுதியினரால் மாவட்டங்கள் தோறும் பயன்தரு மரக்கன்றுகளும், பழமரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்தவாரம் வவுனியா வடக்கு கனகராயன்குளம், நெடுங்கேணி பிரதேசத்தில் விவ சாயப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பெற்று, பழமரக் கன்றுகளும் விநியோகிக்கப்பெற்று,நாட்டப்பட்டுள்ளன..

– அதேபோன்று கடந்த ஞாயிறன்று முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன் குளபிரதேச பாலிநகர் பாடசாலையில் பயன்தரு வேம்பு, இலுப்பை, தேக்கு மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பெற்றுநாட்டப்பட்டன.

மற்றும் கிளி.மாவட்ட பளைப்பிரதேசத்தில் பழமரக் கன்றுகளும் மாசார் கிராமத்தில் சமூக காடுவளர்ப்பு திட்டத்திற்கு பயன்தரு வேம்பு, இலுப்பை, தேக்கு போன்ற மரக்கன்றுகளும் நடுவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படுள்ளது.

நேற்று பகல் கிளி.மாவட்ட அரச செயலக வளாகத் தில் கிளி.அரச அதிபர் இராசநாயகம் மலைவேம்பு மரக் கன்றுகளை நாட்டிவைத்தார்.



நேற்று பிற்பகல் கிளி.கலாச்சார மண்டப வளாகத்தில் கரைச்சிபிரதேச செயலர் பொன்நித்தியானந்தன் மற்றும் கமக்கார அமைப்புக்களின் சம்மேளனதலைவர் மனோ கரன் ஆகியோர் பயன்தருமரக்கன்றுகளை நாட்டி வைத் தனர். (சோ)

# இரு மாவீரர்கள் நினைவாக பேருந்து தரிப்பிடம் திறப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் பேருந்து தரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. காலை 10.00 மணியளவில் மேஜர் தணிகை மாறன், வீரவேங்கை தணிகைமாறன் ஆகிய இருமாவீரர்களின் நினைவாக அவர்களின் பெற்றோரினால் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு சந்தியில் அமைக்கப்பட்டபேருந்து தரிப்பு நிலையத்தை வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளரும் வடமராட்சி கிழக்கின் தேவாலயபங்குத்தந்தையும் நாடாவினை வெட்டி திறந்து வைத்தனர். (05)

# மாணவர்களுக்கு கற்றல் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவை கற்றல் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

கடந்தகால யுத்த அனர்த்தங்க ளால் பாதிக்கப்பட்டு பின்தங்கிப் போயுள்ள யாழ்.மாவட்ட மாணவர்க ளின் கல்வித் தரத்தை மேம்பாட டையச் செய்து போட்டிப்பரீட்சைகளில் சித்திபெறவைக்கும் நோக்குடனேயே தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை யினர் இச்செயற்திட்டத்தில் ஈடுபட்டுள் ளனர்.அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்திலுள்ள வலிகாமம், தீவ கம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென் மராட்சி ஆகிய கல்வி வலயங்கள் ரீதியாக இக்கருத்தரங்குகள் நடத் தப்பட்டு வருகின்றன.

பிரபல ஆசிரியர்களின் வழிகாட் டலில் இடம்பெற்றுவரும் இக்கருத்த ரங்குகளில் பங்குபற்றி ஏராளமான மாணவர்கள் பயன்பெற்று வருகின் றனர். (33)

# இசை நிகழ்வில் குண்டுவீச்சு ஒருவர் பலி;ஆறுபேர் காயம்

(கொழும்பு)

இறக்குவானை மொரவக்கதெனிய எனுமிடத்தில் ஞாயிறன்று இரவு இசை நிகழ்ச்சியின் போது கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இதில் ஒருவர் பலியாகியுள்ளார். ஆறுபேரின் நிலை கவலைக்கிடம் என்றும், நான்குபேர் காயமடைந்துள்ளதாகவும் இறக்குவானைப் பொலிசார் கூறியுள்ளனர்.

இசை நிகழ்ச்சியின் போது இரண்டு குழுக்களுக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அது கைக்குண்டு வீச்சுவரை சென்றதையடுத்தே இந்நிலை ஏற்பட்டடுள்ளது. என்றும் பொலிசார் கூறியுள்ளார்கள்.

## -வடக்கு-கிழக்கு மாகாண

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு அணி சம்பியன்

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாண விளை யாட்டுத்துறை அமைச்சு வருடாந்தம் நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டி யில் மட்டக்களப்பு அணி சம்பிய னாகியுள்ளது.இறுதிப்போட்டியில் திரு கோணமலை மாவட்ட அணியுடன் போட்டியிட்ட மட்டக்களப்பு அணி 52:48 எனும் புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியுள்ளது.

இந்தப் போட்டித்தொடர் திருகோணமலை ஏகாம்பரம் விளை யாட்டு மைதா னத்தில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மாவட்ட அணி கள் பங்குபற்றியுள்ளன.

# க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றுவோர் கவனத்திற்கு

(கொழும்பு)

கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு தேசிய அடையாள அட்டை இல்லையானால் அவற்றை தனிப்பட்ட, மற்றும் பாட சாலை பரீட்சார்த்திகள் எதிர்வரும் 16ம் திகதிவரை நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளுமாறு ஆட்பதிவு த்திணைக்களம் அறிவித்துள்ளது. அதேநேரம்இந்த பரீட்சையில் குளறுபடியை செய்யும் பரீட்சார்த் திகளுக்குகடும் தண்டனை வழங்கப் படும் என பரீட்சைஆணையாளர் எச் சரித்துள்ளார் கடந்த க.பொ.த.சாதா ரண பரீட்சையில்குளறுபடியை செய்தசுமார் 2000 பரீட்சார்த்திகளின் முடிவுகள் ரத்து செய்யபட்டுள்ளமை யையும்அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.(32)

## இன்றுகூடி ஆராய்வு

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் பாராளு மன்றக்கட்டடத்தில் இன்று நடைபெற வுள்ளதாக அந்தக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கட்சியின் கொற டாவான முன்னாள்அமைச்சர் மகிந்த சமரசிங்க கருத்துதெரிவிக்கை யில் சபாநாயகர் பதவிக்கான தமது வேட் பாளர் கூட்டத்தில் உத்தியோக பூர்வ மாக தெரிவுசெய்யப்படுவார் எனத் தெரிவித்தார்.

# உத்தேச அபிவிருத்தி திட்டங்கள் குறித்து உலக வங்கி அதிகாரி யாழ். இல் ஆராய்வு

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில் "நியாப்" திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டிய விவசாய அபிவிருத்தித்திட் டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக உலக வங்கியின் நிபுணத்துவ அதி காரியொருவர் யாழ். வருகை தந் துள்ளார்.

'ரிச்சட் கிக்ஹெறான்" எனும் குறித்த நிபுணத்துவ அதிகாரியுடன் வட கிழக்கு மாகாண சபையின் விவ சாயப் பணிப்பாளர் ஞானச்சந்திரன் உதவி விவசாயப்பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் விஜ யம் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த குழு வினர் யாழ். அரச அதிபர் செ.பத் மநாதன் தலைமையில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் செயலக அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர்.

"நியாப்" திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் விவசாய அபிவிருத்தித்திட் டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ந்த குழுவினர் நடப்பு ஆண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்கான முன் மொழிவுகள் தொடர்பாக ஆராய்ந்ததாகவும், சந்திப்பில் கலந்து கொண்ட யாழ். செயலக அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார். (27)

# வடமராட்சிக் கரையோரப் பகுதிகளில் சவுக்கு மரங்கள் அதிகளவில் தறிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் உள்ள மணற் காடு,குடத்தனை ஆகியபகுதிகளில் சட்டவிரோதமாக சவுக்குமரங்களை தறிப்போர் தொகை அதிகரித்து வருவ தாக சுற்றுச் சூழல் பாதுகாப்புச்சபை கவலைதெரிவிக்கிறது.

கரையோரப்பிரதேசங்களான மேற்படி பகுதிகளில் கடலரிப்பினை தவிர்த்து சுற்றாடல் நலனைப் பேணுவதற்காகச் சவுக்கு மரங்கள் நடுகை செய்யப் பட்டுநீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளிலிருந்து பச்சை மரங்களை தறித்து செல்வது சட்டரீதியாக தடை செய் யப்பட் டுள்ளது எனினும் வியாபார நோக் கத்திற்காகவும் சுயதேவைகளுக் காகவும் இப்பகுதிகளில்இருந்து சவுக்குமரங்கள் தறித்தெடுத்துச் செல்லப்படுகின்றன. இச்சட்ட விரோதச்செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு ஸ்ரீலங்காப் பொலீசார் முன்வராது இருப்பதுடன் அற்ப சொற்ப லஞ்சங்களைப் பெற்றுக் கொண்டு இத்தகைய சட்டவிரோதச் செயல்களுக்குத்துணை போவதாக வும் பொலிசார் மீது குற்றம் சாட்டப் பட்டு வருகிறது. (33)

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்கு ரூ.17.5கோடி நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையை அபிவிருத்தி செய்வதற் கென 17கோடியே 50லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்திற்கான துரித அபி விருத்தித் திட்ட நிதி ஒதுக்கீட் டிலிருந்து யாழ்.அரச அதிபர் செ.பத் மநாதனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்நிதியிலிருந்து 6கோடியே 50 லட்சம் ரூபா இருதயநோய் சிகிச் சைப்பிரிவை அபிவிருத்தி செய்வ தற்கும், 9கோடிரூபா அவசர சிகிச் சைப்பிரிவை அபிவிருத்தி செய்வ தற்கும்,2கோடிரூபா வைத்திய சாலைக்கான இயந்திர தொழில் நுட்ப, உபகரண வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.இந்நிதி மூலமான அபி விருத்தி நடவடிக்கைகள் உடனடி யாகவே ஆரம்பிக்கப்படவுள்ளன. (33)


## பகல் நேர இலவசக் கணினிப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தினால் நடாத்தப் படுகின்ற கணினிப் பயிற்சி நிலையத்தில் மா/போ குடும்பங்களைச் சார்ந்தர்வர்களுக்கான இலவச கணினிப் பயிற்சியினை மேற் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையோர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும். நேரடியாகவும் விண்ணப் பங்களை ஒப்படைக்கலாம்.

*பயிற்சி நெறி விபரம்*

MS Office - அடிப்படைப்பயிற்சி

Adobe Page Maker
Adobe Photoshop
English } மேலதிக பயிற்சி



*பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி*

**மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகம்,**
**நடுவப்பணியகம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

*குறிப்பு:-*


*முன்பு எமது கணினி பயிற்சி நிலையத்தில் பயிற்சிநெறியினை மேற்கொண்டவர்களும் மேலதிக பயிற்சிநெறிக்காக விண்ணப்பிக்கலாம்.

*முன்னர் விண்ணப்பித்தவர்கள் தங்கள் பதிவினை நேரில் வருகை தந்து உறுதிசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வேறு பிரதேசங்களில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள், உணவு வசதிகள் செய்து தரப்படமாட்டாது.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 25.04.2004**

(கி-9452)



## சிந்தனைக்கு

எமது போராளிகளின் தனிப்பட்ட நேர்மை- ஒழுக்கம் - வழிகாட்டும் வகையில் வாழும் வாழ்க்கை - இவையே மக்கள் எம்மீது மரியாதை வைக்கக் காரணங்களாகும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-04-2004

## எமக்கு அக்கறை இல்லையா?

வடக்கு கிழக்கில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்து சில சர்வதேச நிறுவனங்களால் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகின்றன. சிறுவர்களின் உரிமைகள் பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பனவற்றை அவை நடத்துவதிலும், அதற் கென பெருமளவு நிதியைச் செலவீடு செய்தும் வருகின்றன.

சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது கேள்விக்கு இடமற்ற ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதொன்று. ஆகையினால், சிறுவர்களின் உரிமைகள் பற்றிய கருத்தரங்குகள் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுவது தென்பதும் வரவேற்கத்தக்கதொன்றுதான்.

இதேவேளை, இச்சிறுவர்களின் உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பான சர்வதேச நிறுவனங்களின் செயற்பாடுகள் இலங்கையில் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல பொதுவில் உலகில் போர் இடம்பெறும் பிரதேசங்கள் எங்கும் மேற்கொள்ளப் படும்ஒன்றாகவே உள்ளது. போர்க்களப் பூமியில் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் அதிகளவில் எழுவது இதற்குக் காரணமாக கூறப்படுகின்றது.

இவ்வாறானால் தற்பொழுது எம்மத்தியில் எழும் பிரதானமான கேள்வி யுத்தப் பிரதேசங்களில் வாழும் வளர்ந்தோரிடம் தமது பிள்ளைகள்,தமது சகோதரர்கள் மீதுள்ள பற்று, பாசம் என்பவற்றை விடச் சர்வதேச நிறுவனங்களுக்கு அதாவது எமது தேசத்திற்கு வெளியில் உள்ளவர்களுக்கு; குறிப்பாக மேற்குலகத்தவர்களுக்கு அதிகம் உண்டா? என்பதே ஆகும். அதாவது எமது மத்தியிலுள்ளவர்களுக்கு சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர்களே எமது எதிர்காலச் செல்வம் என்பது புரியாததொன்றா?

யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் சிறுவர்களின் உரிமைகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகின்றன என்பது உண்மையே. ஆனால் இங்கு தனியாகச் சிறுவர்களின் உரிமைகள் மட்டும்தான் பாதிப்பிற்கு உள்ளாகின்றதா. ஆண், பெண், சிறியோர், முதியோர் என்ற வேறுபாடு எதுவுமின்றி அனைத்துத் தரப்பினரது உரிமைகளுமே பாதிப்பிற்கு உள்ளாகின்றன.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திய போது சிறுவர் முதியோர், ஆண்கள்,பெண்கள் என்ற வேறுபாட்டுடன் தாக்குதல் நடத்தவில்லை. கண்மூடித்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவுமே தாக்குதல நடத்தியது. சுருக்கமாகச் சொன்னால் வடக்கு கிழக்கில் சிறுவர்களுக்கு மட்டும் பிரச்சினை என்பது இல்லை. அனைத்து மக்களும், அனைத்துத்தரப்பினருக்குமானதாகவே பிரச்சினை உள்ளது.

யுத்தம் ஒருபுறம்இருக்கட்டும். யுத்த பூமிக்கு வெளியில் உள்ள பிரதேசங்களிலும் சிறார்களின் பிரச்சினை இருக்கவே செய்கின்றன. பாலியல் துர்நடத் தைக்கு உட்படுத்தப்படுவதில் இருந்து சட்டவிரோத தொடர் பில் நடவடிக்கைகளுக்குச் சிறார்களைப் பயன்படுத்துதல், வேலைத்தளங்களில், தொழிற்சாலைகளில், சிறார்களைப் பயன்படுத்துதல் என்பவையெல்லாம் நடைபெறத்தான் செய்கின்றன.

ஆனால், இவற்றில் பல தெரியாமல் செய்யப்படுபவையும் அல்ல. ஒரு தாய் தனது சிறார்களை வேலைக்கு அனுப்ப அனுமதிக்கிறார் எனில் அத்தாய்க்கு அதைவிட வேறு வழியில்லை என்ற நிலையே காரணமாகும். தனது பிள்ளை கஷ்ரப்படு வதையும், இம்சைப்படுவதையும் எந்தத் தாயும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

சிறுவர்கள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்ற சூழ்நிலை காணப்படுகின்றதென்றால் அதற்கான காரணம் பெரும்பாலும் வறுமையாகவே இருக்கும். ஆகையினால் சிறுவர்களின் உரிமைகள் பற்றிப்பேசுவதும் வாதிப்பதும் வரவேற்கத்தக்கதாயினும் சிறுவர்களின் பிரச்சினையில் இருந்து விடுபட வழிசமைக்காது இது குறித்துப்பேசுவதனால் பெரும் பயன் எதையும் ஈட்டிவிட முடியாது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் சிறுவர்களின் உரிமைகள் பற்றிப் பேசப்படுவதும், உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் நடைமுறையில் சாத்தியப்பாடானதொன்றாக இருக்கலாம். இதற்கு அங்குள்ள சமூகச் சூழ்நிலையானது ஏற்றதானதாகவுள்ளது. அதாவது சமூகம் பலவிதத் திலும் வளர்ச்சிகண்டதாகவுள்ளது. அதற்காக இங்கு சிறார்களின் உரிமைகள் பாதுக்கப்படுவதற்கான காலம் உருவாகவில்லை எனக் கூறவில்லை. சிறுவர்களின் உரிமை களைப் பாதுகாப்பதற்கென செய்யவேண்டியவை நிரம்பவே உண்டு.

அதாவது சிறுவர்கள் சமுதாயத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நெருக்கடிகள் என்பவற்றுக்குத் தீர்வுகாண வேண்டும். இவை தனியாக சிறுவர்களுடன் சம்பந்தப்பட்டவையாக இல்லை. குடும்பத்துடனும், முழுச்சமுதாயத்துடனும் சம்பந்தப்பட்டவையாகவே உள்ளது. அதுமட்டுமல்ல, இது ஒரு பிரதேசத்தின், நாட்டின் எல்லைக்குள் மட்டும் சம்பந்தப் பட்டதாக இல்லை. சர்வதேச பொருளாதார மற்றும் அனைத்து ஒழுங்குகளுடனும் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளன. அவற்றில் மாற்றம் காணாது குறுகிய பரப்பிற்குள், எல்லைக்குள், நின்று இவை குறித்துப் பேசுவதால் இலக்கினை எட்டிவிட உதவிவிடப்போவதில்லை.

# அரசதிணைக்கள உயர்பதவிகளில் அரசுக்கு சார்பானவர்கள் நியமனம்

### ட்ரான்பேரன்ஸி இன்ரநெசனல் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

அரசாங்க திணைக்களங்களின் உயர்பதவிகளில் அரசாங்கத்துக்கு சார்பானவர்கள் நியமிக்கப்படுவதால் திறமையானதும் நேர்மையானதுமான நிர்வாகத்தை செய்யமுடியாது என உலகளாவிய ரீதியில் ஊழல்களுக்கு எதிராக செயற்பட்டுவரும் ட்ரான்பேரன்சி இன்ரநெசனல் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தைப் பதவிக்கு கொண்டு வருவதற்கு உதவியவர்களே பெரும்பாலும் திணைக்கள தலைவர்களாகவும் கூட்டுத்தாபன தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக இவர்கள் கட்சி அரசியலை அடிப்படையாக கொண்டு செயற்பட தலைப்படுவர்.

எனவே இந்த செயற்பாடு மாற்றப்படவேண்டும் என்பதே எமது நோக்கமென அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் இது குறித்து இந்த நிறுவனம் ஆய்வு ஒன்றையும் விரைவில் நடத்தவுள்ளது.

# வடமேல் மாகாணசபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றிபெறும்

### -கட்சியின் மாகாணத்தலைவர் நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசு இம்முறை பொதுத்தேர்தலில் தோல்வியைத் தழுவிக்கொண்டாலும் வடமேல்மாகாண சபைத்தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறும் என வடமேல் மாகாண ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் அபேரத்ன அறிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி ஆட்சியின் பொழுது அதிகமான சேவைகள் இங்குள்ள விவசாயிகளுக்கு செய்துகொடுக்கப்பட்டுள்ளது. இம்முறை வடமேல் மாகாணசபை தேர்தல் பிரச்சாரங்களுக்கு நாட்டிலுள்ள ஐக்கிய தேசியமுன்னணியின் இளைஞர்கள் யுவதிகள். அனைவரையும் தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபடுத்தியிருப்பதாக குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமராபியசீலி தெரிவித்துள்ளார். வடமேல் மாகாண சபைத்தேர்தல் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

# வெளிநாடுகளுக்கான 10 தூதுவர்கள் சிறிலங்கா அரசால் திருப்பியழைப்பு

### விசுவாசம் மிக்கவர்களை நியமிக்க முடிவு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சிறிலங்காவிற்கான 10 வெளிநாட்டுத் தூதுவர்களை மீள அழைத்திருப்பதுடன் அவர்களின் இடங்களுக்கு தமக்கு விசுவாசமானவர்களை நியமிக்க உள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் கடந்த ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட தூதுவர்களே இவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். யார்யார் புதிதாக தூதுவர் பதவிகளுக்கு நியமனம் செய்யப் படுவார்கள் என்றவிபரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது என்றும் கூறப் பட்டுள்ளது.

# கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய ஊழல்களை கண்டறிய தனிநபர் ஆணைக்குழு

(கொழும்பு)

கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையத்தில் நடந்தாகக் கூறப்படும் மோசடி தொடர்பாக விசாரிப்பதற்கு தனிநபர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப் படவுள்ளது.

மேற்படி தனிநபர் ஆணைக்குழுவை அமைப்பதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதி அரசர் ஒருவரின் உதவிகளை நாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வர்த்தக பாவனையாளர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதேவேளை சதோசவின் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களும் தனியார் மயப்படுத்தப் பட்டுள்ளன. ஆனால் மொத்த விற்பனைப் பிரிவு விற்கப்படவில்லை. எனவே அதன் அபிவிருத்திக்காகத் தான் பாடுபடப் போவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க சதோச விற்பனை நிலையங்களை தனியார் மயமாக்கியதன் மூலம் வேலை இழந்த 700 இற்கும் மேற்பட்ட ஊழியர்களை மீண்டும் சேர்த்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சபாநாயகர் தெரிவில் ஹெலஉறுமய நடுநிலை வகிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் [illegible] திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறும் சபாநாயகர் தெரிவு வாக்களிப்பில் பெரும்பாலும் நடுநிலைவகிக்கப் போவதாக ஜாதிக ஹெலஉறுமய கூறியுள்ளது. நேற்று முன்தினம் ஜாதிக ஹெலஉறுமயவின் அரசியல் உயர்பீடக்கூடி நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவு மற்றும் தாம் நாடாளுமன்றத்தில் செயற்பட வேண்டிய முறைசம்பந்தமாக ஆராய்ந்தது. இதன்போதே சபாநாயகர் தெரிவில் நடுநிலை கொள்கையை கடைப்பிடிக்கப்போவதாகத் தீர்மானித்த ஹெலஉறுமய இரண்டுகட்சிகளும் இணைந்து தமது கட்சிக்கு சபாநாயகர்பதவியை வழங்க முன்வந்தால் அதனை பரிசீலிக்க தயார் எனவும தெரிவித்துள்ளது. (32)

### அணித் தலைமையில் மாற்றமில்லை

அண்மையில் முடிவுற்ற இந்தியாவுடனான போட்டித் தொடர்களில் பாகிஸ்தான் அணி தோல்வியைத் தழுவினாலும் அணியின் தலைவராக தொடர்ந்து இச் சமாம் உல்ஹக் பதவிவகிப்பர் என அறிவிக்கப்படுகிறது அவர் இவ்வருட இறுதிவரை அணித தலைவராகஇருப்பார் என கிரிக்கெட் சபைதெரிவித்துள்ளது.

# 2-வது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் இங்கிலாந்து மே.இந்திய தீவுகள் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடரின் 2வது போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது.

மழைகாரணமாக 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மே.இந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களைப்பெற்றது.

பின்னர் 157 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்அணி 8விக்கட்டுக்களைஇழந்து 158ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. இத் தொடரின் முதல் போட்டியும் மழை காரணமாக ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மரடோனா உடல் நிலையில் முன்னேற்றம்

பிரேசில் கால்பந்தாட்ட அணியை உலகக் கிண்ணவெற்றிக்கு வழி நடத்திய புகழ்பெற்ற வீரர் பியகோ மரடோனாவின் உடல் நிலை தேறிவருகின்றதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இருதய நோய்மற்றும் சுவாசக்கோளாறினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டஇந்தபிரசித்திபெற்ற கால்பந்தாட்டவீரர் இன்னமும்தீவிரகண்காணிப்புப் பிரிவிலேயேவைக்கப்பட்டுள்ளார். எனவும்இவரது இரத்த அழுத்தம் இயல்பு நிலைக்கு திரும்பி வருவதாகவும் ஆனால் இயந்திரத்தின் உதவியுடனேயே மரடோனா சுவாசித்து வருவதாகவும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இவர்அதிகளவு போதைப் பொருளை உட்கொண்டமையே நோய்வாய்ப்படுவதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டமையை மருத்துவ நிபுணர் நிராகரித்துள்ளார்.



# தேசியத் தலைவருடன் சந்திரசேகரன், மனோகணேசன் சந்திப்பு





# ஐ.தே.முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் மூவர் சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை

## -கட்சி மாறலாம் என்று ஆரூடம்

(கொழும்பு)

கடந்த ஐ.தே. முன்னணியிலிருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் மூவர் சனாதிபதி சந்திரிகாவை சந்தித்து நீண்ட நேரப்பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த தேர்தலில் ஐ.தே. முன்னணி சார்பில் வெற்றிபெற்றுள்ள இரு முன்னாள் அமைச்சரவை அங்கீகாரம் பெறாத அமைச்சர்களும் பிரதியமைச்சரும் சனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.


இவர்கள் மத்திய ஊவா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களின் நோக்கம் சந்திரிகா அரசுக்கு ஆதரவை வழங்குவது தான் எனவும் கூறப்படுகிறது.

# முச்சக்கரவண்டி-சிற்றூர்தி விபத்து ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

ஏ-9 வீதியில் மாங்குளத்திற்கும் கனகராயன்குளத்திற்கும் இடையில் கையஸ் வாகனமும் ஆட்டோவும் நேரெதிரே மோதியதில் ஒருவர் உயிரிழந்தார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுபிற்பகல் 3.30 மணியளவில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஆட்டோ (NP-HO-2969 இலக்கமுடைய பச்சைநிறம்) புளியங்குளம் நோக்கி சென்றுகொண்டிருந்த கையஸ் வாகனத்துடன் மோதியது.

இதன்போது ஆட்டோ முற்றாகச் சேதமடைந்தது அதில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார் இவ்வாறு உயிரிழந்தவரின் பெயர்விபரம் கிடைக்கப்பெறவில்லை இவரின் சடலம் தற்போது வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது இவ்வாறு உயிரிழந்தவர் 55வயது மதிக்கத்தக்கவர் என்றும் வெள்ளைநிறத்தில் கட்டமிடப்பட்ட சேட் அணிந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



ஆட்டோவின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் ஆட்டோ முற்றாக சேதமடைந்தநிலையில் இவர்களை அயலவர்கள் கூடி ஆட்டோவில் இருந்து வெளியே இழுத்தெடுத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். (லோ)

# 22பேர் பலி

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு 13 மாநிலங்களில் நேற்று நடைபெற்ற வேளை பல்வேறு இடங்களில் இடம் பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களில் 22 பேர் உயிரிழந்துள்ளதுடன் 200 பேர் காயமடைந்துள்ளனர்.

மணிப்பூரில் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் 4 இராணுவத்தினரும், பீகாரில் 11 பேரும் வாராமுல்லாவில் குண்டுவெடித்ததில் 5 பேர் அத்துடன் வாக்குப்பதிவுகளை பார்வையிடச் சென்ற பத்திரிகையாளர்களின் வாகனத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பத்திரிகையாளர்கள் 2 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனது கழுத்தை தானே வெட்டி குடும்பஸ்தர் தற்கொலை

(அலுவலக செய்தியாளர்)

தனது கழுத்தை தானே வெட்டி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் கிளி.உருத்திரபுரம் எள்ளுக்காட்டு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது வல்லிபுரம்-யோகேஸ்வரன் (வயது 45)என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் நேற்று முன்தினம் வீட்டில் மனைவி இல்லாத வேளை தனது பிள்ளைகளை வீட்டை விட்டு வெளியில் சென்று இருக்குமாறு கூறிவிட்டு வீட்டினுள் இருந்த படுக்கையில் படுத்திருந்த குறித்த நபர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் தனது கழுத்தை வெட்டியுள்ளார். இதனால் அவரது கழுத்தின் முன் பகுதி குரல் வளையுடன் துண்டிக்கப்பட்டது. இந்நிலையில் வெளியே இருந்த பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்த தந்தையாரின் கழுத்தில் இருந்து இரத்தம் வருவதைக் கண்டு தந்தையாரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். மருத்துவமனைக்குக் கொண்டு செல்கையில் அவர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிளிநொச்சி நகரை சிங்களப்படைகள் கைப்பற்றிய காலப்பகுதியில் மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்தார். இந் நிலையில் தனது கையாலேயே தன்கழுத்தை வெட்டி உயிர் இழந்துள்ளார். இவ்வாறு இவர் தனது கழுத்தை வெட்டுவதற்கு பாவித்த கத்தி இரத்தம் தோய்ந்த நிலையில் இறந்தவரின் கையில் காணப்பட்டது.

இந்நிலையில் இவரின் சடலம் கிளி. மாவட்ட மருத்துவமனையில் பிரேதபரிசோதனைக்காக எடுத்து வரப்பட்டது. மேற்படி மரணம் தொடர்பான விசாரணையை கிளி காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (லோ. தீ)

## சத்துருக்கொண்டான்..

மற்போன முன்னால் புளொட் உறுப்பினர் நாகேந்திரா-குபேந்திரா என இனம் காணப்பட்டுள்ளது. சடலத்தின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டுள்ளது.இவரின் மரணவிசாரணையின் போது தாயார் சரஸ்வதி சாட்சிய மளிக்கையில்:

சம்பவம் நடைபெற்றஅன்று இரவு எனதுமகன் பிள்ளையான் என்பவரால் கூட்டிப்பட்டு வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டதாக தகவல் கிடைத்ததெனவும் அதற்கு பின்னர் மகனைப் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். மரணவிசாரணையை மேற்கொண்ட பதில் நீதவான் விஜோபா இந்திரன் இம் மரணம் ஆட்கொலையென தீர்ப்பு வழங்கியுள்ளார். சாட்சியால் குறிப்பிடப்பட்ட பிள்ளையான் என்பவர் தற்போதுதலைமறைவாகியுள்ளாரென தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவரது மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## உயிருடன்...

அழுகைகளோ அற்றநிலையில் கிடந்ததால் அது இறந்துவிட்டது எனக்கருதி அங்கு கடமையில் இருந்த தாதியர்கள் அச்சிசுவை அங்கிருந்து அகற்றிவடுமாறு சுத்திகரிப்பாளரை பணித்துள்ளனர்.

இதற்கமைய சுத்திகரிப்பு தொழிலாளி அச் சிசுவை எடுத்துச்செல்லும் போது அச் சிசு உயிருடன் இருப்பது அதன் உடல் அசைவுகளை வைத்து சுத்திகரிப்புத் தொழிலாளியால் கண்டுபிடிக்கப்பட்டு வைத்தியருக்குத் தெரியப்படுத் தப்பட்டதைத் தொடர்ந்து அதிதீவிரசிகிச்சைப் பிரிவில் அச் சிசு சேர்க்கப்பட்டு உயிர்பிழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## பிணக்கைத்....

தொடரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மகாவலி அமைச்சு தரப்படாமல் தாம் ஏனைய அமைச்சுக்களை ஏற்கப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி கூறுகிறது. அதேநேரம் மகாவலித்துறையைதாம் விட்டுத் தரப்போவதில்லை என சிறிலங்கா சுதந்திர கட்சி உறுதியாக உள்ள நிலையிலேயே இந்த முறுகல் தோன்றியுள்ளது. (32)

## ஆயுத....

எமது மக்கள் ஆயுத ரீதியாக பலமாக இருக்கின்ற அதேவேளை, அரசியல் ரீதியாகவும் நாம் பலமாக இருக்கின்றோம் என்பதை உணர்த்தியிருக்கின்றார்கள். மக்கள் ஒரு கொடியின் ஒரு தலைமையின் கீழ் இன்று அணி திரண்டிருக்கின்றார்கள் என்ற இந்தச் செய்தி ஒரு சர்வசன வாக்கெடுப்பாக உலகிற்கு உணர்த்தப்பட்டுள்ளது. அந்த வகையில் நாங்கள் அனைவரும் இணைந்து செயற்படுவதன் மூலம்தான் வெற்றியைப் பெற முடியும்: இந்தத் தேர்தலின் மூலம் கிடைத்த 22 ஆசனங்களுடன் சாதாரணமான முறையில் செயற்படுவது என்பது ஏற்புடையதாக இருக்காது.

ஏனெனில், தென்னிலங்கையில் இருக்கின்ற அரசியல் நிலவரம் மிகவும் மோசமாக இருக்கிறது. எமது 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் மிகவும் பலமான நிலையில் இருக்க வேண்டும்.

வரும் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவு இடம் பெறவுள்ளது. யாரை சபாநாயகராக தெரிவு செய்வது என்று நாம் இன்றைய சந்திப்பில் தீர்மானிக்கவில்லை. அதேவேளை, யாருக்கு ஆதரவு கொடுப்பது என்பது பற்றியும் நாம் முடிவெடுக்கவில்லை. எமது முடிவு மக்களின் அபிலாசைகளை பிரதிபலிப்பதாகவே இருக்கும்.

அதேவேளை, டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைக்க இருக்கின்றோம். அதற்கான போராட்டத்தையும் முன்னெடுக்க இருக்கின்றோம். ஏனெனில், தமிழ்த் தேசியத்துக்கு வாக்களித்த மக்கள் கூனிக் குறுக்கித் தமது தேவைகளைப் பெறுவதற்காக டக்ளஸ் தேவானந்தாவிடம் செல்வதை எம்மால் அனுமதிக்க முடியாது. எனவே அவரின் அமைச்சுப் பொறுப்பை விலக்குவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழு முயற்சிகளில் ஈடுபடும் எனவும் தெரிவித்தார். (லோ)

## அனைவரும்....

களுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், தளபதி கேணல் சொர்ணம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, மகளிர் படையணித் தளபதிகளான கேணல் விதுசா, கேணல் துர்க்கா மற்றும் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்,மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோருடன் ஐந்து மாவட்டங்களின் அரசியல் துறைபொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.சுமார் இரண்டுமணிநேரம் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் கருத்துரை வழங்கினார். அவர் தனது உரையில் "தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள்தான் என்பதை உலகிற்கு உணர்த்தியமைக்கு எனது வாழ்த்துக்களும் நன்றிகளும்" எனக்குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் "17 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீர்களின் தியாகத்தாலும், அர்ப்பணிப்பாலும் நாம் இந்தப்பெரும் வெற்றியைப்பெற்றிருக்கின்றோம். எம்முள் இருந்த சிறு சிறு முரண்பாடுகளெல்லாம் மறந்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒருபெரும் சக்தியாக நிற்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். நீண்டகாலமாகவே நாம் எமது ஒற்றுமைக்குறைபாட்டாலே எதிரிக்கு பல சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளோம்.அண்மையில் கூட எமது போராட்டத்தில் இருள் சூழ்ந்தது. ஆனால் அதேவேகத்தில் அது கலைந்ததையும் நீங்கள் அறிவீர்கள். மட்டு அம்பாறைப்போராளிகளும், அங்குள்ள மக்களுமே இப்பிரச்சினைக்கு பெருமளவில் முகம்கொடுத்து தீர்வு காண விளைந்ததோடு, எமக்கு பூரண ஆதரவையும் தந்தனர். இதனாலேயே நாம் மிகவும் இலகுவாக இச் சிக்கலை வெல்ல முடிந்தது. இதில் எமக்கு கிடைத்த வெற்றி இனிவரும் காலங்களில் சாதி,மத, பிரதேசவாதம் போன்ற குறுகிய வாதங்கள் எதுவும் எம் மக்களிடையே இருக்கப்போவதில்லை என்பதையே எடுத்துக்காட்டியுள்ளது." எனவும் குறிப்பிட்டார். மேலும் அவர் தனது உரையில் "எங்களுக்குள் இருக்கும் சுய நலம், ஆசைகள் என்பவற்றை பொதுநலனுக்காக விட்டுக்கொடுக்கப் பழகவேண்டும் இதற்கு நாம் துயிலும் இல்லங்களில் இருக்கும் மாவீரர்களின் கல்லறைகளை பார்ப்போமேயானால் புரிந்துகொள்ளலாம். மாவீரர்கள் தமக்கென்று எதனையும் எதிர்பாராது மண்ணுக்கும், மக்களுக்கும் தமது கடமையை செய்து இருக்கிறார்கள். இவர்கள் போன்றே நாமும் எதனையும் எதிர்பாராது பொதுநலனுக்காக எமது கடமையை செய்யவேண்டும்" எனவும் குறிப்பிட்ட அவர் இறுதியாக " எப்பொழுதும் எமது பிரச்சினைக்கு எமது பலம்தான் தீர்வைப்பெற்றுத் தரும்" எனவும் குறிப்பிட்டு "உங்கள் பணிகளை திறம்பட செய்ய மாவீரர்கள் துணைநிற்பார்கள்" எனக் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தமது கருத்துரைகளை வழங்கியதோடு தேசியத் தலைமையின் கீழ் ஓரணியாக நின்று மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்காக உழைப்போம் என குறிப்பிட்டனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது